ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 10.2 – இரக்கமின்றி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 10.2 – இரக்கமின்றி

‡ இரக்கம் இன்றி எங்கோன் செய்த தீமை ⋆
இம்மையே எமக்கெய்திற்றுக் காணீர் ⋆
பரக்க யாம் இன்றுரைத்தென் இராவணன் பட்டனன் ⋆
இனி யாவர்க்குரைக்கோம் ⋆
குரக்கு நாயகர் காள் ! இளங்கோவே ⋆
கோல வல்வில் இராமபிரானே ⋆
அரக்கர் ஆடழைப்பார் இல்லை ⋆
நாங்கள் அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ ‖ **10.2.1** ‖

பத்து நீள் முடியும் அவற்றிரட்டிப் ⋆
பாழித் தோளும் படைத்தவன் செல்வம் ⋆
சித்தம் மங்கையர் பால்வைத்துக் கெட்டான் ⋆
செய்வதொன்றறியா அடியோங்கள் ⋆
ஒத்த தோள் இரண்டும் ஒரு முடியும் ⋆
ஒருவர் தம் திறத்தோம் அன்றி வாழ்ந்தோம் ⋆
அத்த ! எம் பெருமான் ! எம்மைக் கொல்லேல் ⋆
அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ ‖ **10.2.2** ‖

தண்டகாரணியம் புகுந்து ⋆
அன்று தையலைத் தகவிலி எம் கோமான் ⋆
கொண்டு போந்து கெட்டான் எமக்கிங்கோர் குற்றம் இல்லை ⋆
கொல்லேல் குல வேந்தே ⋆
பெண்டிரால் கெடும் இக்குடி தன்னைப் ⋆

பேசுகின்றதென் தாசரதீ ⋆
உன் அண்ட வாணர் உகப்பதே செய்தாய் ⋆
அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ ॥ **10.2.3** ॥

எஞ்சலில் இலங்கைக்கிறை ⋆
எங்கோன் தன்னை முன் பணிந்து ⋆
எங்கள் கண் முகப்பே நஞ்சு தான் அரக்கர் குடிக்கென்று ⋆
நங்கையை அவன் தம்பியே சொன்னான் ⋆
விஞ்சை வானவர் வேண்டிற்றே பட்டோம் ⋆
வேரி வார் பொழில் மா மயில் அன்ன ⋆
அஞ்சல் ஓதியைக் கொண்டு நடமின் ⋆
அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ ॥ **10.2.4** ॥

செம் பொன் நீள் முடி எங்கள் இராவணன் ⋆
சீதை என்பதோர் தெய்வம் கொணர்ந்து ⋆
வம்புலாம் கடி காவில் சிறையா வைத்ததே ⋆
குற்றம் ஆயிற்றுக் காணீர் ⋆
கும்பனோடு நிகும்பனும் பட்டான் ⋆
கூற்றம் மானிடமாய் வந்து தோன்றி ⋆
அம்பினால் எம்மைக் கொன்றிடுகின்றது ⋆
அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ ॥ **10.2.5** ॥

ஓத மா கடலைக் கடந்தேறி ⋆
உயர்கொள் மாக் கடி காவை இறுத்து ⋆
காதல் மக்களும் சுற்றமும் கொன்று ⋆
கடி இலங்கை மலங்க எரித்துத் ⋆
தூது வந்த குரங்குக்கே ⋆
உங்கள் தோன்றல் தேவியை விட்டு கொடாதே ⋆

ஆதர் நின்று படுகின்றதந்தோ ! ⋆
அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ ॥ **10.2.6** ॥

தாழம் இன்றி முந்நீரை அஞ்ஞான்று ⋆
தகைந்ததே கண்டு வஞ்சி நுண் மருங்குல் ⋆
மாழை மான் மட நோக்கியை விட்டு ⋆
வாழகில்லா மதி இல் மனத்தானை ⋆
ஏழையை இலங்கைக்கிறை தன்னை ⋆
எங்களை ஒழியக் கொலை அவனை ⋆
சூழுமா நினை மா மணி வண்ணா ! ⋆
சொல்லினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ ॥ **10.2.7** ॥

மனம் கொண்டேறும் மண்டோதரி முதலா ⋆
அங்கயற் கண்ணினார்கள் இருப்ப ⋆
தனங்கொள் மென் முலை நோக்கம் ஒழிந்து ⋆
தஞ்சமே சில தாபதர் என்று ⋆
புனங்கொள் மென் மயிலைச் சிறை வைத்த ⋆
புன்மையாளன் நெஞ்சில் புக எய்த ⋆
அனங்கன் அன்ன திண் தோள் எம் இராமற்கு ⋆
அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ ॥ **10.2.8** ॥

புரங்கள் மூன்றும் ஓர் மாத்திரைப் போதில் ⋆
பொங்கெரிக்கிரை கண்டவன் அம்பின் ⋆
சரங்களே கொடிதாய் அடுகின்ற ⋆
சாம்பவான் உடன் நிற்கத் தொழுதோம் ⋆
இரங்கு நீ எமக்கெந்தை பிரானே ! ⋆
இலங்கு வெங்கதிரோன் சிறுவா ⋆

குரங்குகட்கரசே ! எம்மைக் கொல்லேல் !⋆
கூறினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ ‖ **10.2.9** ‖

‡ அங்கு வானவர்க்காகுலம் தீர⋆
அணி இலங்கை அழித்தவன் தன்னை⋆
பொங்கு மா வலவன் கலிகன்றி⋆
புகன்ற பொங்கத்தம் கொண்டு⋆
இவ்வுலகில் எங்கும் பாடி நின்றாடுமின் தொண்டீர் !⋆
இம்மையே இடர் இல்லை⋆
இறந்தால் தங்கும் ஊர் அண்டமே கண்டு கொண்மின்⋆
சாற்றினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ ‖ **10.2.10** ‖

அடிவரவு — இரக்கம் பத்து தண்டக எஞ்சல் செம்பொன் ஓதம் தாழம் மனம் புரங்கள் அங்கு ஏத்து

இரக்கமின்றி முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்